**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.124/2021.

Prosecution witness for P.W. 19 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. ரவிசங்கர்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.03.2026.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது குலசேகரப்பட்டிணம் கடலோர காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு கயத்தார் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது 31.01.2020 அன்று 15 மணியளவில் அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று நிலைய குற்ற எண் 32/2020 இதச 302 பிரிவின்படி வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 24**. அதை புகாருடன் சேர்த்து கோவில்பட்டி நீதித்துறை நடுவர் எண் 2க்கு அ.சா.18 மூலம் அனுப்பினேன். நகல்களை தகுந்த உயர் அதிகாரிகளுக்கும், ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார். ஒரு நகலை திருநெல்வேலி காவல்துறை துணை தலைவருக்கும், காவலர் பாலகிருஷ்ணன் மூலமாக அனுப்பினேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

31.01.2020 அன்று என் பணி நேரம் என்னவென்றால் எங்களுக்கு பணி நேரம் என்று குறிப்பிட்டு இல்லை. எப்போதுமே எங்களுக்கு பணி நேரம்தான். அன்றைய தினம் காலை 7 மணியளவில் நான் நிலையத்திற்கு

வந்தேன். அன்றைய தினம் நான் காலை 7 மணியளவில் பணிக்கு வந்துவிட்டு நிலையத்தை விட்டு வெளியே செல்லவில்லை. அ.சா.1 அன்றைய தினம் எத்தனை மணிக்கு காவல்நிலையத்திற்கு வந்தார் என்றால் ஞாபகமில்லை. மேற்படி புகார் எங்கு, யாரால் எழுதப்பட்டது என்று எனக்குத் தெரியாது. அ.சா.1 சொல்லச் சொல்ல அவரது மகனான அ.சா.2 புகாரை எழுதினார். அ.சா.ஆ1 புகாரில் அ.சா.2ன் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். சுமார் அரை மணி நேரத்தில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து முடித்தேன். எதிரியின் மனைவிக்கும், இறந்துபோன நபருக்கும் கள்ளத்தொடர்பு இருந்ததை அ.சா.1 நேரில் பார்த்ததாகவோ, கேள்விப்பட்டதாகவோ புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்துபோன மில்டன்ராஜ் என்பவரின் கைபேசிக்கு அ.சா.1, 2 தொடர்பு கொண்டதாக புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இறந்துபோன மில்டன்ராஜின் கைபேசி அவரது உடலின் அருகில் இருந்ததாக புகாரில் சொல்லப்படவில்லை. பிரேதத்தின் அருகில் செருப்பு இருந்ததாகவும் சொல்லப்படவில்லை. பிரேதம் இருந்த இடத்தின் அருகில் தள்ளு முள்ளு ஏற்பட்டு அதற்கான தடையங்கள் இருந்ததாகவும் புகாரில் சொல்லப்படவில்லை. அ.சா.1 பிரேதத்தை பார்த்துவிட்டு வந்துதான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அ.சா.1 பகல் 2.30 மணியளவில் பிரேதத்தை பார்த்ததாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது. அதற்கு முன்பாகவே வேறு யாராவது பிரேதத்தை பார்த்திருக்கலாம் என்றால் சரிதான். அதனால் அ.சா.1 புகார் கொடுப்பதற்கு முன்பாகவே எங்கள் நிலையத்திற்கு பிரேதம் இருப்பதாக தகவல் வந்திருக்கும் என்றால் சரிதான். என் கைபேசிக்கு தகவல் சொன்னார்கள். அதுகுறித்து நான் என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் ஆய்வாளருக்கு தகவல் சொன்னேன். அதனால் நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் நிலையத்தில் வேறு

வேலை இருந்ததால் நான் நடடிவக்கை எடுக்கவில்லை. கைபேசி மூலம் தகவல் சொன்ன நபர் பெயர் மற்றும் கைபேசி எண் ஆகியவை ஞாபகமில்லை. முதன் முதலில் தகவல் வரும்போதே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டுமென்றால் சரிதான். 30.01.2020 தேதியிலேயே பிரேதம் இருப்பது குறித்து காவல்நிலையத்திற்கு தகவல் வந்துவிட்டது என்றால் சரியல்ல. 30.01.2020 தேதியிலேயே பிரேதம் இருக்கும் இடம் யாருக்கு பாத்தியப்பட்டது என்பது குறித்து தகுந்த கிராம நிர்வாக அலுவலருக்கு கடிதம் அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி இடம் யாருக்கு பாத்தியப்பட்டது என்பது குறித்து கிராம நிர்வாக அலுவலர் 30.01.2020 லேயே எங்கள் நிலையத்திற்கு அறிக்கை கொடுத்துவிட்டார் என்றால் எனக்குத் தெரியாது. பிரேதத்தில் என்ன நிறமுள்ள ஆடைகள் இருந்தது என்பதை புகாரில் சொல்லவில்லை. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் .அ.சா.1 நிலையம் ஆஜராகி புகார் கொடுக்கவில்லை என்றும், நானும் வழக்கு பதிவு செய்யவில்லை என்றும், 30.01.2020 ல் கொடுக்கப்பட்ட புகார் இந்த வழக்கில் மறைக்கப்பட்டு பின்னிட்டு அ.சா.1 மூலம் இந்த வழக்கிற்கு தோதாக தயாரிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் நான் தவறான வழக்கு பதிவு செய்திருக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு கைபேசி மூலம் தகவல் கிடைத்ததாகவும், அதை ஆய்வாளருக்கு தெரிவித்ததாகவும் ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN Date: 2026.03.25 19:35:45 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.